1994 நவம்பர் 9]

(ஆ) அயோடின் கலந்த உப்பை விற்க வேண்டும் என்ற ஆணையால் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த பிரச்சினை. பொது மக்கள் பயன்படுத்தும் உப்பு விற்பனையில் சில நிபந்தனைகளை மேற்கொண்டு அயோடின் கலந்த உப்பைத்தான் விற்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று திரு. டேனியல் ராஜ் அவர்கள் ஒரு அறிவிப்பை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புக் கொடுத்த பிற உறுப்பினர்கள் இந்த அவையில் இல்லை. எனவே அது தள்ளுபடி செய்யப்படுகிறது. திரு. டேனியல் ராஜ் அவர்கள் இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 1 ஜனவரி 1995 முதல் அயோடின் கலந்த உப்பைத்தான் விற்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அகில இந்திய அளவிலே மூன்றில் ஒரு பங்கு உப்பு உற்பத்தியை தமிழகத்தில்தான் செய்கிறார்கள். தேசப்பிதா காந்தி அவர்களும் வைஸ்ராய் இர்வின் அவர்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே 10 ஏக்கருக்குக் குறைவான இடங்களில் உப்பு உற்பத்தியை சிறு உற்பத்தியாளர்கள் இன்றையதினத்தில் தமிழகத்திலே செய்து வருகிறார்கள். அதேபோல அந்த உப்பளங்களிலே இலட்சக்கணக்கான தொழிலாளர்களும் பணியாற்றி வருகின்றனர். திடீர் என்று அரசு அயோடின் கலந்த உப்பைத்தான் விற்க வேண்டும் என்று அறிவித்ததன் காரணமாக இலட்சக்கணக்கான தொழிலாளர்களும், ஆயிரக்கணக்கான சிறு உப்பு உற்பத்தியாளர்களுடைய நிலைமையும் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதேபோல இன்றைய தினத்திலே அதிகபட்சமாக ஒரு கிலோ உப்பு 75 பைசாவுக்கு விற்றுக் கொண்டிருக்கிறது. அயோடின் கலந்த உப்பைத் தான் விற்க வேண்டும் என்று அரசு அறிவித்த பிறகு, அயோடின் கலந்த உப்பினுடைய விலை ஒரு கிலோ 3.50 முதல் 4.00 ரூபாய் அளவிற்கு உயரக் கூடிய நிலைமை ஏற்படும். இன்று தமிழகத்திலே அரிசியினுடைய விலை எவ்வளவு இருக்கிறதோ அதே அளவுக்கு உப்பை வாங்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடும். அதே போன்று சிறு உற்பத்தியாளர்களைப் பொறுத்த மட்டிலே அதிகமாக விலை கொடுத்து அயோடினை வாங்க முடியாத நிலைமையிலே

அவர்கள் அயோடினை சாதாரண உப்பிலே கலக்க முடியாமல் பெரிய பணம் படைத்தவர்கள் இடத்திலே அந்த உப்பை விற்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினையைச் சொல்லி விட்டீர்கள் இல்லையா, போதும். (குறுக்கீடு) என்னென்ன காரணம் என்று சொல்வதற்கு எல்லாம் இதை ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக் கொள்ளவில்லை. இதில் விரிவாகப் பேச முடியாது. அந்தப் பிரச்சினையை மட்டும் சொல்லி அரசின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும். சீக்கிரம் சொல்லி முடித்துக் கொள்ளுங்கள்.

முற்பகல் *11.15*

திரு. எஸ். டேனியல்ராஜ்: தலைவர் அவர்களே, அதேபோன்று இந்த சாதாரண சிறு உப்பு உற்பத்தியாளர்கள் அயோடின் கலந்த உப்பை கலப்பதற்கு மெஷினை வாங்க வேண்டும் என்றால் கிட்டத்தட்ட 2 இலட்சம் ரூபாய் முதல் 10 இலட்சம் ரூபாய் வரையிலே கொடுத்து அந்த மெஷினை வாங்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுவார்கள். உடனடியாக அந்த மெஷினை வாங்க முடியாது. ஆகவே கால அவகாசம் அவர்களுக்கும் தேவைப்படுகிறது. ஆகவே அரசைப் பொறுத்தமட்டிலே 1 ஜனவரி 1995 முதல் அமுலாக்க வேண்டும் என்ற இந்த அறிவிப்பை மாற்றி 3 ஆண்டுகாலம் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயோடின் கலந்த உப்பை பயன்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவிட்டதற்குக் காரணம் அயோடின் என்ற நுண் சக்தி தினந்தோறும் மனிதனுக்குத் தேவைப்படுகிறது என்று வல்லுநர்கள் தெரிவித்த காரணத்தால் அதை அடிப்படையாக வைத்து இது செய்யப்பட்டிருக்கிறது. தைராய்டு சுரப்பி முறையாக இயங்குவதற்கு இந்த உப்பு தேவைப்படுகிறது என்று வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதிலே ஏற்கெனவே தைராய்டு சம்பந்தமான நோய் மட்டும்தான் வரும் என்று கருதப்பட்டது. ஆனால் சமீபத்திய ஆய்விலே பல்வேறு நோய்கள் வருவதற்குக் காரணமாக இருப்பதே அயோடின் போதவில்லை என்பதுதான் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டு அதன்மீது அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. இதனால் வரக்கூடிய நோய்கள்

1994 நவம்பர் 9] [திரு. சு. முத்துசாமி]

கருச்சிதைவு ஏற்படுவது, குழந்தைகள் இறந்து பிறப்பது, குழந்தைகள் பிறந்த உடனே இறந்துவிடுவது, மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளாகப் பிறப்பது, உயரம் குறைவு, அதே போல குறைவான அறிவுத் திறனோடு பிறப்பது, மாறு கண்ணோடு பிறப்பது, காது கேளாத நிலை, உடல் சோர்வு இப்படிப்பட்ட பல்வேறு நோய்கள் வருவதற்கு இதுதான் காரணம் என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசும் இதையே வலியுறுத்துகிறது. பல மாநிலங்களிலே இது செய்யப்பட்டு விட்டது. தமிழகத்திலே பெரும்பாலான பகுதி உப்பு இங்குதான் உற்பத்தியாகிறது என்றாலும்கூட அவைகள் வெளி மாநிலத்திலேயும் சேர்த்து விற்கப்பட வேண்டிய ஒன்று. அங்கே இந்த முறை கொண்டுவரப்பட்டுவிட்டது. எனவே இந்த நிலையிலே இதைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்திலேகூட இது ஒரு அம்சமாகவே சேர்க்கப்பட்டிருக்கிறது. அதோடு மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டிலேயும் இது வலியுறுத்தப்பட்டு அங்கேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதோடு இந்த உப்பைப் பயன்படுத்துவதால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. இப்படிப்பட்ட ஒரு கருத்துகூட வெளியிலே பரவலாகச் சொல்லப்பட்டது. என்ன அளவு தேவையோ அந்த அளவுக்கு மட்டும்தான் நம்முடைய உடல் அமைப்பு தேவையான அயோடினை எடுத்துக்கொள்ளும். மீதம் இருப்பதை, தேவையில்லை என்றால் தள்ளிவிடும் என்றுகூட கருத்து சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையிலே பொது மக்களுக்கு இதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை, நன்மைதான் கிடைக்கும் என்ற காரணத்தினாலும் மிகப்பெரிய குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காகவும் இது ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டு இருக்கிறது. சிறுதொழில் உப்பு உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான் அவர்களுக்கு கால அவகாசம் கொடுத்துத்தான்--4 மாத கால அவகாசம் கொடுத்துத்தான் இதை நாங்கள் செய்திருக்கிறோம்.

அதோடு இப்போது யூனிசெஃப் நிறுவனத்தின் மூலமாக கூட்டுறவுத் துறையின் வாயிலாக இதற்கு கடன் கொடுத்து அந்த இயந்திரத்தை வாங்குவதற்கான வாய்ப்பைக்கூட அவர்கள் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். உலகம் முழுவதும் இன்றைக்கு இது நிலவி வருகிற காரணத்தால் ஏதாவது சின்ன காரணங்களைச் சொல்லி இதை நாம் தடுத்துவிடுவது அவ்வளவு சரியாக இருக்காது. உப்பினுடைய

விலை உயர்ந்துவிடும் என்று சொன்னீர்கள். இவ்வளவு பிரச்சினைகளைத் தடுப்பதற்காக கொஞ்சம் கூடுதலாகச் செலவழித்தால் தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். இங்கே தேவை இல்லாமல் அரிசி விலையை வேறு சொன்னீர்கள். அதற்கும் நீங்கள்தான் காரணம் என்பதை மறந்து நீங்கள் சொல்லிவிட்டீர்கள் என்று நான் கருதுகிறேன். மிகச் சரியாகவே பொது மக்களுடைய பொது நன்மையைக் கருதி இது செய்யப்பட்டிருக்கிறது. எல்லா மாநிலங்களிலேயும் செய்யப் பட்டிருக்கிறது. பெரிய பட்டியலே இருக்கிறது. அத்தனையும் நான் சொல்ல முடியாது. 20 மாநிலங்களுக்கு மேலே இன்றைக்கு செய்து முடித்து இருக்கிறார்கள். எனவே, நாம் இதைச் செய்யாமல் விட்டால் இந்த மக்களுக்கு நாம் செய்கிற துரோகம் என்றாகிவிடும் என்ற காரணத்தால் அவர்களுக்கு வேறு என்ன வகையிலே, அந்த சிறு தொழில் செய்யக்கூடியவர்களுக்கு என்ன வகையிலே உதவிகளை நாம் செய்யலாமோ அதைச் செய்வதற்கு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாம். எனவே இதை வேண்டாம் என்று சொல்வது அல்லது 3 ஆண்டுகாலம் தள்ளுவது என்பது, இந்த நாட்டிலே அறிவு இல்லாதவர்களை உற்பத்தி செய்வதற்கு நாம் இடுகிற வித்தாகப் போய்விடும் என்ற காரணத்தினால் இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கைவிட்டுவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(இ) ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் மூடப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை தாம்பரத்தில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி மூடப்பட்டுள்ள நிலையில் தற்போது எழுந்துள்ள பிரச்சினை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று திரு. எஸ். எம். கிருஷ்ணன் ஒரு அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார். அந்தப் பிரச்சினையை மட்டும் சொல்லி அரசின் பதிலைப் பெறக் கேட்டுக்கொள்கிறேன். சுருக்கமாக இரண்டு நிமிடங்களில் அதைத் தெரிவியுங்கள்.

முற்பகல் 11-20

திரு. எஸ். எம். கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் கம்பெனி மூடப்பட்டுள்ளது. சுமார் மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பி.ஐ.எஃப்.ஆர். இப்போது அந்த நிறுவனத்தை நிரந்தரமாக மூடிவிடலாம் என்ற பரிந்துரையைச் செய்திருக்கிறது. நான் இந்த அரசைக்கேட்டுக் கொள்வது,